Mail Received

சென்னை–5, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் செயல் முறைகள்
முன்னிலை – டாக்டர்.இரா.பிருந்தா தேவி, இ.ஆ.ப.,

செ.மு. ஆணை எண்.அபபி3/25968/2022 நாள். 18.11.2022

பொருள் : பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – 10.09.2020 அன்று இயற்கை எய்திய திரு.சி.சண்முகசுந்தரம், துணை வேளாண்மை அலுவலர் – வாரிசு /மகன் திரு.ச.சங்கரநாராயணன் அவர்களுக்கு கருணை அடிப்படையில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக பணிநியமனம் செய்து தோட்டக்கலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – பணி நியமன ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை எண்18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ 1)த் துறை, நாள். 23.01.2020
2. கடலூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் கடித எண். அ2/10594/2020, நாள்.12.10.2021 மற்றும் 16.02.2022
3. சென்னை–5, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி6/111136/2021, நாள்: 11.11.2022.

*****

ஆணை :–

பார்வையில் காணும் சென்னை–05, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையில், கடலூர், வேளாண்மை இணை இயக்குநர் கட்டுப்பாட்டில் குறிஞ்சிப்பாடி, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலத்தில் கீழ் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் துணை வேளாண்மை அலுவலர் ஆகப் பணிபுரிந்து வந்தபோது பணிக்காலத்தில் மரணமடைந்த சி.சண்முகசுந்தரம் என்பவரின் வாரிசு / மகன் திரு.ச.சங்கரநாராயணன் அவர்களுக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் ரூ.19500–71900 (நிலை –8) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக பணிநியமனம் செய்து தோட்டக்கலை துறைக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, திரு.ச.சங்கரநாராயணன் அவர்களுக்கு கடலூர், தோட்டக்கலை துணை இயக்குநர், அலுவலகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் (பி.அ) பணியிடத்திற்கு பணிநியமனம் செய்து ஆணையிடப்படுகிறது. பார்வை 3–ல் காணும் செயல்முறையில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகள் அனைத்து இவ்வாணைக்கும் பொருந்தும்.

திரு.ச.சங்கரநாராயணன் அவர்கள் பணியில் சேரும் சமயம் அரசு சிவில் சர்ஜன் (Govt Civil Surgeon) அவர்களிடமிருந்து மருத்துவ உடல்நல தகுதிச் சான்று பெற்று அவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/–இரா.பிருந்தா தேவி,
இயக்குநர், தோட்டக்கலை மற்றும்
மலைப்பயிர்கள் துறை, சென்னை–5

பெறுநர்–
திரு.ச.சங்கரநாராயணன்,
த/பெ.சி.சண்முகசுந்தரம், (லேட்)
73, ஸ்ரீகுமரன் அவெண்யூ
லட்சுமி நாராயணபுரம் (L.N.புரம்)
பண்ருட்டி அஞ்சல் மற்றும் தாலுக்கா,
கடலூர் மாவட்டம் – 607 106 (பதிவஞ்சலில்)
நகல்–வேளாண்மை இயக்குநர், சென்னை–05.
நகல் – தோட்டக்கலை துணை இயக்குநர், கடலூர்.
(தனியர் பணிசேர் விவரத்தினை உடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது).
நகல்– அபபி3 இருப்புக்கோப்பு

//ஆணைப்படி//

துணை இயக்குநர்(நிர்)

21/11/2022

Scanned by CamScanner